## பாடம் - 8
## இஸ்ரா,மிஃராஜ் பயணம்

## الدرس الثامن
## الإسراء والمعراج

நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் தாயிஃப் சென்று திரும்பிய பிறகு அங்கு அவர்களுக்கு ஏற்பட்ட துன்பங்கள், பிறகு அபூதாலிபின் மரணம், அதைத் தொடர்ந்து கதீஜா(ரலி) யின் மரணம், அதன் பின்னர் குறைஷிகளின் கடும் தொல்லைகள் ஆகியவற்றிற்குப் பிறகு அவர்களின் உள்ளத்தில் கவலைகள் அதிகமாகி விட்டன. அப்போது இறைவனிடமிருந்து சங்கைக்குரிய இந்நபிக்கு ஆறுதல் வந்தது. ஒரு நாள் இரவு நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் தூங்கிக் கொண்டிருந்தபோது ஜிப்ரீல் (அலை) அவர்கள் புராக் எனும் வாகனத்தைக் கொண்டு வந்தார்கள். அது இரண்டு இறக்கைகள் கொண்ட மின்னல் போன்று விரைந்து செல்லக்கூடிய குதிரை போன்ற ஒரு பிராணியாகும். ஜிப்ரீல் (அலை) அதன் மீது அவர்களை ஏற்றி பாலஸ்தீனத்திலுள்ள ஷபைத்துல் முகத்தஸ் எனும் பள்ளிவாசலுக்கு கொண்டு சென்றார்கள். பிறகு அங்கிருந்து அவர்களை வானத்திற்கு அழைத்துச் சென்றார்கள். அங்கு அவர்கள் தம் இறைவனின் மாபெரும் அத்தாட்சிகளைக் கண்டார்கள். வானில் வைத்தே ஐவேளைத் தொழுகைகள் கடமையாக்கப்பட்டன. அதே இரவில் அவர்கள் தெளிந்த உள்ளத் துடனும் அழுத்தமான உறுதியுடனும் மக்காவிற்குத் திரும்பி வந்தார்கள். இது விஷயமாகத் தான் அல்லாஹ் பின் வருமாறு கூறுகின்றான்.

'மஸ்ஜிதுல் ஹராமிலிருந்து சுற்றுப்புறத்தை பாக்கியமிக்கதாக நாம் ஆக்கிய மஸ்ஜிதுல் அக்ஸா வரை ஓர் இரவில் தனது அடியாரை அழைத்துச் சென்றவன் தூயவன்! (எதற்காகவெனில்) நமது சான்றுகளை அவருக்குக் காட்டுவதற்காக. திண்ணமாக அவன் செவியுறுபவனும் பார்ப்பவனுமாவான்.' (17:1)

நபியவர்கள் மறுநாள் காலையில் கஅபா ஆலயத்திற்குச் சென்று நடந்ததை மக்களிடம் கூறினார்கள். அப்போது நிராகரிப்பாளர்கள் அவர்களைப் பொய்யர் என்று கடுமையாகத் தூற்றினர். கேலியும் கிண்டலும் செய்தனர். பின்பு அங்கு அமர்ந்திருந்த சிலர் பைத்துல் முகத்தஸ் எப்படி இருந்தது என்பதைக் கூறும்படிக் கேட்டனர். இவ்வாறு அவர்கள் கேட்டதன் நோக்கம் சொல்ல முடியாத நிலைக்கு நபிகள் நாயகம்(ஸல்) அவர்களை ஆக்கவேண்டுமென்பதே! நபிகள் நாயகம் (ஸல்)அவர்கள் அதன் ஒவ்வொரு பகுதி பற்றி விரிவாகக் கூற ஆரம்பித்தார்கள். நிராகரிப்பாளர்கள் இப்படிக் கேட்டதோடு நின்றுவிட வில்லை மாறாக வேறொரு ஆதாரமும் எங்களுக்கு வேண்டுமெனக் கூறினார்கள்.

அதற்கு நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் 'வழியில் மக்காவை நோக்கி வந்து கொண்டிருந்த ஒரு வியாபாரக் கூட்டத்தைச் சந்தித்தேன்' என்று கூறினார்கள். அவர்களின் தன்மைகளையும் அவர்களின் ஒட்டகங்களின் எண்ணிக்கையையும் அவர்கள் வந்த நேரத்தையும் அவர்களிடம் தெரிவித்தார்கள். நபிகள் நாயகம் (ஸல்) உண்மையையே கூறினார்கள். ஆனால் நிராகரிப்பாளர்களோ தமது இறைநிராகரிப்பு, பிடிவாதம், நம்ப மறுப்பது ஆகிவற்றிலேயே மூழ்கி வழிதவறிச் சென்று கொண்டிருந்தார்கள். மிஃராஜ் சென்று வந்த காலையில் ஜீப்ரீல்(அலை) வந்து நபிகள் நாயகத்திற்கு ஐவேளைத் தொழுகைகளின் முறைகளையும் அதற்குரிய நேரங்களையும் கற்றுக் கொடுத்தார்கள். அதற்கு முன்னர் தொழுகை காலையிலும் மாலையிலும் இரண்டு ரக்அத்தாக இருந்தது.

குறைஷிகள் சத்தியத்தை வெறுப்பதில் உறுதியாக இருந்து கொண்டிருந்த இந்த நேரத்தில் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மக்காவுக்கு வரக்கூடிய மக்களிடம் சத்தியத்தை எடுத்துச் சொல்வதில் உறுதியாக இருந்தார்கள். மக்களை அவர்களுடைய கூடாரங்களிலும் அவர்கள் வந்து தங்கியிருக்கக் கூடிய இடங்களிலும் சந்தித்து அவர்களுக்கு இஸ்லாத்தை விளக்கிக் கூறிக் கொண்டிருந்தார்கள். நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பெரிய தகப்பனார் அபூலஹபோ நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பின்தொடர்ந்து சென்று அவர்களைக் குறித்தும் அவர்களின் பிரச்சாரம் குறித்தும் மக்களை எச்சரித்து வந்தான். ஒரு தடவை நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மதீனாவிலிருந்து வந்த ஒரு கூட்டத்தாரிடம் சென்று அவர்களை இஸ்லாத்தின் பால் அழைத்தார்கள். அதை அவர்கள் கவனமாகக் கேட்டார்கள். அவர்களை ஈமான் கொண்டு அவர்களைப் பின்பற்றுவதென முடிவு செய்தார்கள்.

ஒரு நபி அனுப்பப்பட இருக்கிறார் என்றும் அவர் வரும் காலம் நெருங்கி விட்டது என்றும் யூதர்கள் வழியாக மதீனாவாசிகள் கேட்டிருந்தார்கள். நபிகள் நாயகம்(ஸல்)அவர்கள் அவர்களை இஸ்லாத்தின் பால் அழைத்ததும் யூதர்கள் கூறிய நபி இவர்தான் என்பதை அறிந்து கொண்டு விரைந்து வந்து இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார்கள். இது விஷயத்தில் யூதர்கள் தங்களை முந்திவிடக் கூடா தெனவும் கூறிக் கொண்டார்கள். அவர்கள் மொத்தம் ஆறு பேர். மறு ஆண்டு 12 ஆண்கள் வந்து நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் ஒன்று சேர்ந்தனர். அவர்களுக்கு நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் இஸ்லாத்தைக் கற்றுக் கொடுத்தார்கள்.

அவர்கள் மதீனாவுக்கு திரும்பிச் சென்றபோது அவர்களுக்கு குர்ஆனைக் கற்றுக் கொடுப்பதற்காகவும் மார்க்கச் சட்டங்களை விளக்கிக் கூறுவதற்காகவும் நபியவர்கள் முஸ்அப் இப்னு உமைர் எனும் தோழரை அவர்களுடன் அனுப்பி வைத்தார்கள். முஸ்அப் இப்னு உமைரால் மதீனாவாசிகளுக்கு நல்லதொரு பலனை ஏற்படுத்த முடிந்தது. ஓராண்டிற்குப் பின் அவர் மக்கா திரும்பி வந்தபோது அவருடன் 72 ஆண்களும் இரண்டு பெண்களும் இருந்தனர். அவர்களை நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் ஒன்று கூட்டினார்கள். அவர்கள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் அவர்களின் மார்க்கத்திற்கு உதவிபுரிவதற்கும் அவர்களின் கட்டளையை ஏற்று நடப்பதற்கும் உறுதிப்பிரமாணம் செய்து கொண்டார்கள். அதன் பின்னர் அவர்கள் மதீனா திரும்பினர்.